26.06.2024

OS No: 166/2021

வா.சா 2 திரு. கருப்பையா

<u>குறுக்கு விசாரணை :</u>

எனது வீடு எங்குள்ளது என்றால் மல்லல், சிவகங்கை மாவட்டம் , காளையார் கோவில் தாலுகா, சாத்தரசன் கோட்டை அஞ்சல் , கதவு எண். 876 ஆகும். எனது விலாசம் காண்பிப்பதற்கு ஆதார் அட்டையினைதாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கின் விபரம் எனக்கு தெரியும். இந்த வழக்கின் வாதியை பிறந்ததில் இருந்து தெரியும். வாதி எனது சொந்தம் உள்ளூர் காரர். வாதியின் குடும்பத்தார் எல்லாரையும் எனக்கு தெரியும். வாதியின் குடும்பத்தில் 9 பேர்இருக்கிறார்கள். அவர்கள் யார் யார் என்றால் முத்துவீரபாண்டி, சிவசண்முகம், ராமலட்சுமி, கிருஷ்ணம்மாள், மதுபாலன், ஜனனி, இளையராஜா இன்னும் 2 பேர் இருக்கிறார்கள் அவர்கள் பெயர் தெரியவில்லை. இந்த வழக்கினை தாக்கல் செய்தவர் ராமலட்சுமி. ராமலட்சுமி அவருடைய வீட்டுக்காரருக்காக இந்த வழக்கினை தாக்கல் செய்திருக்கிறார். ராமலட்சுமி வீட்டுக்காரர் பெயர் சிவசண்முகம். சிவசண்முகமும் முத்துவீரபாண்டியும் அண்ணன் தம்பிகள். முத்துவீரபாண்டி இறந்து விட்டார். எந்த வருடம் இறந்தார் என்று நியாபகம் இல்லை. சிவசண்முகத்தின் சொத்து விபரம் எல்லாம் எனக்கு தெரியும். இந்த வழக்கு புஞ்சைக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சர்வே எண் எனக்கு தெரியாது. சிவசண்முகம் வெளிநாட்டில் இருக்கிறார். அவருடைய மனைவி குழந்தைகள் இந்த ஊரில் தான் இருக்கிறார்கள் என்றால் ஆமாம். புஞ்சை நிலம் சிவசண்முகத்திற்கு அவருடைய அப்பா இருவருக்கு பிரித்து விட்டதால் கிடைத்தது. சிவசண்முகம் 6 மற்றும் 7 வருடமாக வெளிநாட்டில் இருக்கிறார். இடையில் அவருடைய அக்கா மகன் திருமணத்திற்காக வந்தார். எந்த வருடம் சிவசண்முகத்தின் அக்கா மகனுக்கு திருமணம் ஆனது என்பது பற்றி தெரியவில்லை. திருமணம் முடிந்தவுடன் 1 வாரத்தில் வெளிநாடு போய் விட்டார். பாகபிரிவினை மூலமாக சொத்து கிடைத்தற்கு பாகப்பிரிவினை பத்திரத்தினை தாக்கல் செய்தார்களா என்றால் இல்லை. சொத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. இந்த புஞ்சை நிலத்திற்கு சிவசண்முகம் லோன் எதுவும் வாங்கவில்லை.

P V SANDILYAN Digitally signed by P V SANDILYAN Date: 2024.06.26 17:15:15 +0530